2002 அக்டோபர் 25]

படிக்கும் மாணவர்களுக்கு அத்தனை அடிப்படை வசதிகளும் வேண்டும் என்பதற்காக, அதேபோன்று தனியார் கட்டடங்களில் இயங்கும் விடுதிகளில் அடிப்படை வசதிகள் இல்லையென்ற காரணத்திற்காக ரூ.31.50 இலட்சம் செலவில் இன்று அரசு விடுதிகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டதற்கிணங்க, இவர்கள் நிதியிலிருந்து 5 இலட்சம் ஒதுக்கினாலும், கட்டும் கட்டடங்கள் ரூ.31.50 இலட்சத்தில்தான் கட்டப்படும் என்று இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

20–

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

***10076–திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், வாழப்பாடி ஒன்றியம், கொமாரபாளையத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு கொமாரபாளையம் கிராமப் பொதுமக்கள் எவரும் மனு செய்யவில்லை என்பதால் சங்கம் பதிவு செய்யும் திட்டம் ஏதுமில்லை.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில் கொமாரபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிப்பதற்கு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எவரும் மனு செய்ய வில்லை என்று இங்கு கூறினார்கள். மனு செய்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருதி, அவர்களுக்கு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு முன்வருமா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

[2002 அக்டோபர் 25

முற்பகல் 11—35

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தித் தொழிலில் அதிகபட்சமாக எவ்வளவு மகளிரைப் பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு அவர்களுக்கு அந்தத் தொழிலில் அதிகபட்சமாக வசதி செய்து தரவேண்டுமென்ற நோக்கிலே பல்வேறு சலுகைகளை அறிவித்து சிறப்பாகத் திட்டங்கள் தீட்டிக் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சங்கம் பதிவு செய்யக் கோரி பொது மக்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால் பால் வளத் துறையின் இணைப் பதிவாளர் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, உடனுக்குடன் சங்கங்கள் பதிவு செய்வதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1 முதல் 5) *

முதல் பட்டியல் 1

வாய்க்கால் சுவர் கட்டுதல்

வினா 1811—திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி தையல்குணாம் பட்டினம் வாய்க்காலில் தூர்வாரி இருபுறமும் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

நடப்பு நிதியாண்டில் திட்டம் ஏதுமில்லை.

---

* உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.